DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**OS.No.53 Of 2019**

| | |
|---|---|
| Name:தட்சணாமுர்த்தி | Age: |
| Father Name: துரைவேல்<br>Husband Name : | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Mr.Siva Raj, Gr.III Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 18.06.2026 | |

**18.06.2026**

**விசாரணை தொடங்கிய நேரம் 03.15 PM**

**பி.வா.சா.1. குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள பதிலுரை ஆங்கிலத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதை எனக்கு படித்து காண்பிக்கப்பட்டதா என்றால் படித்து காண்பிக்கப்பட்டது. பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்ல வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டது. தாவா சொத்திற்கு மேற்கு பக்கத்தில் உள்ள காலி இடம் வாதியாலும் தங்கராஜ் என்பவராலும் அனுபவிக்கப்பட்டு வருகிறது என்றால் எனக்கு திசைகள் தெரியாது. என்னுடைய மனைவி பெயரில் கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் 5 செண்ட் தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் என்றால் திசைகள் தெரியாது.

தாவா சொத்து என்ன பரிகாரம் வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் வாதியின் சொத்தை நாங்கள் அனுபவித்து வருவதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். நான் கிரையம் பெற்ற சொத்தினை நான் அளந்து பார்த்தேனா என்றால் அளந்து பார்த்துள்ளேன். எனது சொத்தினை நான் அளந்ததற்கான ரசீது ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வது போல் எனது சொத்தை அளந்தது இல்லை என்றாலும் அவ்வாறு அந்த சொத்தை அளந்து இருந்தால் அதற்குரிய ரசீதை தாக்கல் செய்திருப்பபேன்

என்றாலும் சரியல்ல. ஆறுமுகம், குட்டியம்மாள் ஆகியோரிடம் இருந்து கிருஷ்ணசாமி கிரையம் பெற்றதாக குறிப்பிட்டுள்ள நிலையில் மேற்படி ஆறுமும் மற்றும் குட்டியம்மாளுக்கு நான் கிரையம் பெற்ற சொத்து எவ்வாறு பாத்தியப்பட்டது என்று தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை.

சித்தனகாவூர் கிராமத்தில் தோப்புகாலனி, பள்ளக்காலனி என இரண்டு பகுதிகள் உள்ளது என்றால் சரிதான். நான் தோப்புகாலனியில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். அங்கு சுமார் எத்தனை வீடுகள் இருக்கும் என்றால் 150 வீட்டிற்கு மேல் இருக்கும். தற்போது மேற்படி இடம் முழுவதுமாக கிராம நத்தமாக தான் உள்ளது என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற சொத்தும் கிராம நத்தம் காலி இடம் சொத்து என்றாலும் மேற்படி இடத்தை நான் கிரையம் பெற்றது போல் ஆவணங்கள் தயாரித்து இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற 5 செண்டில் எத்தனை ஆண்டிற்கு முன்பாக வீடு கட்டினேன் என்றால் சுமார் 15 ஆண்டுகளுக்கு முன்பாக வீடு கட்டினேன். நான் ஆரம்ப காலத்தில் பள்ளகாலனியில் தான் வசித்து வந்தேன் என்றால் சரிதான். நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் தாவா சொத்திற்கு சம்பந்தமில்லாத ஆவணங்கள் என்றால் சரியல்ல. வாதியின் அனுபவத்தில் இடையூறு செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன் பொய்யான சங்கதிகள் கொண்டு பதிலுரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி அனுபவத்தில் உள்ள 70 சதுர மீட்டர் சொத்துக்கு மட்டும் தான் நான் அவரது அனுபத்தில் இடையூறு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு மேற்கு பக்கம் உள்ள சொத்திற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 03.45 PM**

**Sd/R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**